24 NOV
EASTERN UNIVERSITY, S

# மாறிவரும் சமூகப் பண்பாட்டு நிலைமைகளுக்கு ஏற்ப மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் வளர்ச்சிகளும்.

## (1980 தொடக்கம் 2005 வரை) ஓர் ஆய்வு.

முத்துராஜா பிறிம்ராஜ்

ரவிச்சந்திரா.B.A(Hons).PGDE,M.Phil

**EU/PGS/2008/AC/Ph.D/02**

PhD08
Thesis
Library - EUSL

இந்த ஆய்வுப் பெருங்கட்டுரை நாடகமும் அரங்கியலும் பாடத்துறையில் கலாநிதிப் பட்டத்திற்காக, கலைகலாசாரப் பீடத்தினூடாக கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு 2011.04.29 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கங்க |
| 1 | ஆய்விற்கான முன்னுரை | 1 - 8 |
| 2 | அத்தியாயம் - 01 | 9 - 51 |
| | மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் பற்றிஇதுவரை நடைபெற்ற ஆய்வுகளும் அவை தொடர்பான இலக்கியப் பதிவுகளும் | |
| 3 | அத்தியாயம் - 02 | 52 - 1 |
| | 1980 ற்குப் பின் மட்டக்களப்புச் சமூகக் கட்டமைப்பும் மாறி வரும் சமூகப்பண்பாட்டு நிலைமைகளும் | |
| 4 | அத்தியாயம் - 03 | 112 - 1 |
| | 1980ற்குப்பின்மரபுவழி நாடகங்களும் அதன் வகை முறைகளும் | |
| 5 | அத்தியாயம் - 04 | 173 - 2 |
| | சமூக வடிவழாக 1980ற்குப் பின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்: | |
| | அ. 1980ற்குப் பின் மரபுவழி நாடக அம்சங்களை நவீன அரங்க கோட்பாடுகளுடன் பிரயோகித்த முயற்சிகள். | |
| | ஆ. மௌனகுருவின் இராவணேசன் ஒரு பதிவு | |
| | இ. கூத்தின் அழகியல் | |

6 அத்தியாயம் - 05 257 - 352

1980ற்குப்பின் ஏற்பட்ட அசைவியக்கம்

காரணமாக மட்டக்களப்பு

மரபுவழிநாடகங்கள்அடைந்த மாற்றங்களும்

வளர்ச்சிகளும்.

அ. மாறிவரும் சமூகப்பண்பாட்டில் அரங்கு

மகிழ்வளிப்புக் கருவியாக மாத்திரமன்றி

மன இன்னல்களைத் தீர்க்கும் கருவியாக

தொழிற்பட்ட முறைமை:

ஆ. மாறிவரும் சமூகப் பண்பாட்டில் கூத்தரங்க

வளர்ச்சிப்போக்கு தொடர்பியல் சாதனமாகப்

பயன்படுத்தப்பட்ட முறைமை:

இ. கூத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக

அரங்கை மீளுருவாக்கம் செய்தல்:

7 முடிவுரை 353 - 374

8 நூற்பட்டியல் 375 - 391

## II

முதல்நிலைத்தரவுகளாக, மட்டக்களப்புப் பிரதேசத்தில் (வாகரை முதல் துறைநீலாவணை) வாழும் கூத்துக் கலைஞர்கள், அண்ணாவிமார், கூத்தளிக்கை நெறியாளர்கள், கூத்தாய்வாளர்கள், அறிஞர்களுடனான உரையாடல்கள் மூலமாகப் பெற்ற தகவல்கள்.

இரண்டாம் நிலைத்தரவுகளாக நூலாதாரங்கள், ஒலி, ஒளி நாடாக்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றின் மூலமாகக் கிடைக்கும் தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## III

இவ்வாய்வு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

1. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களின் நாடகவாக்கச் செழுமை மரபும் மாற்றங்களும்.
2. மரபுவழி நாடகமாகக் கொள்ளப்படும் ஆற்றுகை வடிவங்களினது வகை முறைகள் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் அந்த முறைமை 1980றக்குப் பின் அமைந்துள்ள தன்மை (வடமோடி, தென்மோடி, மகுடி, வசந்தன், பறைமேளக் கூத்துக்கள் )

3. சமூக வடிவமாக 1980ற்குப்பின் மரபுவழி நாடகங்கள் அதன் பண்பாட்டு அடித்தளத்தில் செல்வாக்குச் செலுத்திய முறைமை.
4. சமூக அசைவியக்கம், அரசியற் பொருளாதாரக் காரணிகள், போர்ச்சூழல், புலம்பெயர்வு, இயற்கை அனர்த்தங்கள், தொடர்புச்சாதன வருகை என்பன மரபுவழி நாடகங்களின் வளர்ச்சிக்கும், மாற்றத்திற்கும் எந்தளவிற்கு துணைபுரிந்துள்ளன என்பதை இனங்காணுதல்.

இவ்வாய்வு ஆறு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

முதலாவதுஅத்தியாயம்:-

மட்டக்களப்புமரபுவழிநாடகங்கள் பற்றி இதுவரை நடைபெற்ற ஆய்வுகளும்அவை தொடர்பான இலக்கியப் பதிவுகளும்.

இதில் மட்டக்களப்புமரபுவழி நாடகங்களாகக் கருதப்படும் வடமோடி, தென்மோடி, மகுடி, வசந்தன்,பறைமேளக்கூத்துக்கள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

இரண்டாவது அத்தியாயம் :- 1980ற்குப் பின் மட்டக்களப்புச் சமூகக் கட்டமைப்பும் மாறிவரும் சமூகப்பண்பாட்டு நிலைமைகளும்.

மட்டக்களப்புச் சமூகக் கட்டமைப்பு 1980ற்குப் பின் 2005 வரை அரசியற் சமூகப் பொருளாதார பண்பாட்டு ரீதியாகவும், கல்வி மறுமலர்ச்சி காரணமாகவும், இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் அடைந்துள்ள மாற்றங்கள், வளர்ச்சி நிலைகள் பற்றி அதன் கலை பண்பாட்டோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றது.

மூன்றாவது அத்தியாயம் :- மரபுவழி நாடகங்களும் அதன் வகை முறைமைகளும்.

மரபுவழி நாடகங்களாகக் கொள்ளப்படும் வடமோடி, தென்மோடி, மகுடி, வசந்தன், பறைமேளக் கூத்துக்களினது ஆற்றுகை வடிவங்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள தன்மை பற்றி விரிவாக ஆராயப்படுகிறது.

நான்காவது அத்தியாயம் :- சமூக வடிவமாக 1980ற்குப் பின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்.

இதில் சமூக வடிவமாக 1980ற்குப் பின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் அதன் அழகியல் அம்சத்திலும், கலையிலும் அதன் பண்பாட்டு அடித்தளத்திலும் செல்வாக்குச் செலுத்திய முறைமை கூறப்படுகின்றது.

ஐந்தாவது அத்தியாயம் :- 1980ற்குப் பின் ஏற்பட்ட அசைவியக்கம் காரணமாக மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் அடைந்த மாற்றங்களும் வளர்ச்சிகளும்.

சமூக அசைவியக்கம், அரசியற் பொருளாதாரக் காரணிகள், போர்ச்சூழல், புலம்பெயர்வு, இயற்கை அனர்த்தங்கள், தொடர்புச்சாதன வருகை என்பன மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களின் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் துணை புரிந்துள்ள வகைமுறையை இனங்காண்கின்றது.

ஆறாவது அத்தியாயம் :- முடிவுரை

இதில் ஆய்வு மூலம் கண்டறியப்பட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்படுகின்றன.